## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 227/2014 | Date : 08.03.2024 | DW4 |
|---|---|---|
| Name: செங்கோட்டையன் | S/o. **வீரன்** | |
| Evidence Recorded Time: 12.15 P.M. to 12.20 P.M | | |

### 6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பானை வரவில்லை என்றால் சரிதான். என்னை சாட்சி சொல்ல யார் அழைத்தால் என்றால் காஞ்சனா அழைத்தார். சாட்சி பத்திரம் அவர் சொல்லி தான் எழுதப்பட்டது என்றால் சரிஅல்ல எனக்கு தெரிந்தது நான் சென்னேன் அது எழுதப்பட்டது. இந்த நீதிமன்றத்தில் இதற்கு முன்பு பல முறை சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிஅல்ல. முதல்முறையாக இப்போது தான் வந்திருக்கிறேன். மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பல வழக்குகளின் நான் சாட்சி அளித்துள்ளேன் என்றால் சரிஅல்ல. உயிலை படித்து பார்த்தாக நான் சொல்லியுள்ளேன். சர்வே.எண். தெரியுமா என்றால் தெரியும். ச.எண். 240/235 ஆகும். உயில் எந்த தேதி மாதம் வருடம் என்றால் தெரியாது. 1955 ம் ஆண்டு உயிலாம். வழக்கு சொத்தில் குமரேசன் குத்தகைதாரராக இருக்கிறார் என்று பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரிஅல்ல. அவர் இறக்கும் வரை அவர் தான் குத்தகைதார் இருந்தார் தற்போது அவர் வாரிசுகள் குத்தகைதாரராக இருக்கிறார்கள். ஜோதிலிங்கமும், இராமநாதபிள்ளையும் உடன்பிறந்த சகோதரக்ள் என்றால் அது எனக்கு தெரியாது. ஜோதிலிங்கத்தினுடைய மனைவி தான் இந்த வழக்கில் 7ம் பிரதிவாதி என்றால் தெரியாது. இந்த தாவா சொத்தில் ஜோதிலிங்கத்திற்கும் ராமநாதனுக்கும் இடையே ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டடு தனிப்பட்டா வழுங்கிவிட்டது என்றால் அது தவறாகும். நான் உள்ளுர்காரக்களுக்காக ஜோதிலிங்கம் மற்றும் இராமநாதன் சொத்தை அபகரிக்க வேண்டி பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரிஅல்ல.

### வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வாதி பிரதிவாதி தெரியும் என்றும் சொல்லியுள்ளேன். பிரதிவாதிகள் யார் என்றால் சம்பூரணம், காஞ்சனா, பார்வதி பார்த்சாரதி, முருகேசன் ஆவார்கள். வாதிகள் யார் என்றால் லட்சுமி, பார்வதி, சம்பூரணம், பாக்கியம், விமலா ஆகியோர்கள் ஆவார்கள். இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்திற்காக தான் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு சொத்து துறைசாமி பிள்ளைக்கு சொத்து எவ்வாறு வந்தால் எனக்கு தெரியாது. பூர்வீகமாக வந்தது என்று கேள்வி பட்டேன். இந்த உயிலில் உள்ள அசல் ஆவணத்தை பார்த்துள்ளேன் யார் காட்டினார் என்றால் முருகேசன் காட்டினார்.

குமரேசன் குத்தகைதாரர் வாய்மொழியாகவோ அல்லது எழுத்துபூர்வமாக குத்தகைதாரராக இருந்தாரா என்றால் தெரியாது. குமரேசன் இறப்பிற்கு பின்னிட்டு அவருடைய வாரிசுகள் எதன் அடிப்படையில் இருக்கிறார்களா என்றால் குத்தகை முலமாக இருக்கிறார்கள். தாவா சொத்து இன்றளவும் பாகம் பிரிக்கபடவில்லை என்றால் சரிதான். வாதிகள் தாவா சொத்து பாகம் பிரிப்பதற்கு வாரிசுதார்கள் அனைவரும் தாவா சொத்துக்களை சரிசமமாக பாகம் செய்து கொள்ள உரிமையுடையவர்கள் என்றால் அவ்வாறு இல்லை. குமரேசனும் அவரது குடும்பத்தாரும் சொந்த செலவில் தான் சொத்தை மேம்பாடு செய்தார் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. குமரேசனும் அவரது குடும்பத்தாரும் எத்தனை கிணறுகள் வெட்டியுள்ளார்கள் மற்றும் எத்தனை வீடு கட்டியுள்ளார்கள் என்றால் கிணற்றை தூர் வாரியுள்ளார்கள் பழைய வீட்டை பராமரித்து வைத்துள்ளார். இன்றுவரை இந்த கிணற்றிற்கு மின் இணைப்பு இல்லை என்றால் சரிதான். மேம்பாடு செய்ததற்கு கணக்கு வழக்கு 1982ம் வருடம் அரசாங்கம் நில ஆர்ஜிதம் செய்ய முறை செய்த போது அதை வழக்கு போட்டு தடுத்தார். அந்த வழக்கு எந்த நீதிமன்றத்தில் நடந்தது என்றால் இதே நீதிமன்றத்தில் 10 ஆண்டுகாலமாக நடந்து குமரேசனுக்கு ஆதரவாக தான் தீர்ப்பு வழங்கப்பட்டது. நான் சொன்னது போல அப்படி எந்த ஒரு வழக்கும் குமரேசன் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் தீர்ப்பு வழங்கப்படவில்லை என்றாலும் சரிஅல்ல. இந்த வழக்கில் 1 முதல் 5 பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரிஅல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/– DW4

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டுர்.